## மேயர்.பிரியாராஜன் தலைமை! சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில்

# 15-வது நாளாக அமைச்சர் பி.கே.சேகர் பாபு மக்கள் தேவைகள் தீர்க்கும் பயணம்!

## மக்கள் தேவைகளைக் கேட்டறிந்தார்!

சென்னை,ஜன.25-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கொளத்தூர், அம்பத்தூர், வில்லிவாக்கம், திரு.வி.க நகர், எழும்பூர், துறைமுகம் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 44 வார்டுகளில் அமைப்பு ரீதியாக உள்ள 83 வட்டங்களிலும் மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அதிகாரிகள், கழக நிர்வாகிகள் ஆகியோருடன் பகுதிகள் மற்றும் வார்டுகள் வாரியாக உள்ள பாகங்களில் பொதுமக்கள் தேவைகளை கண்டறியும் சிறப்பு முகாம் இன்று பதினைந்தாவது நாளாக தொடர்ந்து நடைபெற்றது.

இந்நிகழ்வில் நேற்று (24.01.2025) காலை 7.30 மணியளவில் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, 6 வது மண்டலம், வட்டம்- 72 வது வட்டத்தில் மாண்புமிகு மேயர் திருமதி. பிரியா ராஜன் அவர்கள் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி பகுதிக் கழகச் செயலாளர் செ. தமிழ் வேந்தன் மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ் குமார் ஆகியோர் முன்னிலையில், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபுஅவர்கள் திருவிக நகர் வடக்கு பகுதி 72 வது வட்டத்தில் உள்ள டாக்டர். அம்பேத்கர் நகரில் 72வது வார்டு மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் ரூ.40 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்ட உடற்பயிற்சிக் கூடத்தினை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். மேலும், புளியந்தோப்பு, நரசிம்ம நகர் சென்னை நடுநிலைப்பள்ளியில் சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியில் ரூ.1.19 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் கூடுதல் பள்ளிக் கட்டடப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணியினை விரைந்து முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து நரசிம்மன் நகரிலுள்ள தெருக்களில் நடந்து சென்று பொதுமக்களை சந்தித்தபோது அவர்கள் மின்சாரத்துறை, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், பெருநகர சென்னை மாநகராட்சி ஆகிய துறைகள் சார்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய கோரிக்கைகளை கேட்டறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தியும், இதனைத் தொடர்ந்து, அங்குள்ள ஓட்டேரி நல்லா கால்வாயினைப் பார்வையிட்டு, அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும்,பின்னர், பவுடர் மில்ஸ் சாலையில் மின்சாரத்துறையின் காலிமனையில் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும்.. தொடர்ந்து, புளியந்தோப்பில் உள்ள ஆடு, மாடு இறைச்சி கூடத்தினை நவீனப்படுத்தி கழிவு நீர் வெளியேற்றும் வசதி செய்து தருமாறும் வைத்த கோரிக்கைகளுக்கு உடனடியாக தீர்வு காண உத்தரவிட்டார். இந்த ஆய்வின் இடையில் திரு வி க நகர் வடக்கு பகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் எம். திவ்யா அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அவரது தந்தை மாரியப்பன் அவர்களின் மறைவிற்கு ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்தார்.







இந்த ஆய்வின்போது வட்டக் கழகச் செயலாளர்கள் எம்.ஏ.டீக்கா,எம்.இசட்.அபாய் , மாமன்ற உறுப்பினர் எம்.சரவணன் மற்றும் மாநகராட்சி, குடிநீர் வடிகால் வாரியம், மின்வாரிய அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

## கே.ஏழுமலை தலைமை! ஜெ.கருணாநிதி முன்னிலை! சென்னை தென்மேற்கு மாவட்ட

# தி.மு.க. மாணவர் அணி சார்பில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## மயிலை த.வேலு, தயாநிதிமாறன், எஸ்.மோகன், குடந்தை பாஸ்கர் சிறப்புரை!

சென்னை ஜன:25

இதுகுறித்து சென்னை தென்மேற்கு மாவட்ட அமைப்பாளர் எஸ். சரவ தி.மு.க. மாணவர் அணி ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க மாணவரணி சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் மாபெரும் பொதுக் கூட்டம் இன்று ( 25 .1. 2025 சனிக்கிழமை மாலை 6:00 மணி அளவில் ரங்கராஜபுரம்,ஐந்து விளக்கு அருகில் நடைபெறுகிறது.

இம்மாபெரும் கூட்டத்திற்கு தி.நகர் பகுதி கழகச் செயலாளர் கே. ஏழுமலை எம்.சி. தலைமை ஏற்கிறார்.

பகுதி கழகச் செயலாளர் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ, மயிலை பகுதி கழகச் செயலாளர்கள் நந்தனம் கி.மதி எம்.சி, எஸ்.முரளி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.சரவணன், செ. அருள்ராஜ்,ஏ.கே. முகமது காசிம்,எஸ்.டி. புவியர சன், மு.சதீஷ், ம.மஞ்சு ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இம்மாபெரும் வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்தில் தயாநிதி மாறன் எம்.பி, மாவட்ட கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ, கழக மாணவரணி துணைச் செயலாளர் எஸ். மோகன், குடந்தை பாஸ்கர் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.


வட்டக் கழக செயலாளர்கள் கே.எஸ். வெல்டிங் ராஜா, நா.மோ.முரளி மற்றும் மு.பாலகுரு ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

இதில் மாநில,மாவட்ட கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள்,மகளிர் அணி உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு எஸ். சரவணன் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கீழப்பழூவூர் சின்னச்சாமி
### சனவரி 25 (1964)



இந்தித் திணிப்பை எதிர்த்து தனது 27வது வயதில் தமிழ்மொழி காக்க – திருச்சி மாவட்டம், கீழப்பழூவூர் என்கிற சிற்றூர் கழகத் தோழர் திருச்சி ரயில் நிலையத்தின் வாசலில் விடியற்காலை 4.30 மணிக்கு தன் தலையில் பெட்ரோலை ஊற்றிக் கொண்டு நெருப்பில் பற்றவைத்து, கொழுந்துவிட்டு எரியும் தீச்சுவாலைகளுக்கு இடையே ‘தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க!’ என முழக்கமிட்டபடி தியாகத் தீயில் தன்னை மாய்த்துக் கொண்ட தீரன்.

“இந்தி எதிர்ப்புப் போரில் முதன்முதலாகத் தீக்குளித்தவர் என் கணவர்தான். அந்தப் பெருமை ஒன்றுதான் அவர் எனக்கு விட்டுப்போன சொத்து” என அவரது துணைவியார் தெரிவித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## வேலூரில் மாவட்ட மாணவரணி சார்பில்

# வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

வேலூர், ஜன . 25 -

வேலூர் மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் வருகிற சனிக்கிழமை அண்ணா கலையரங்கம் அருகில் நடக்கிறது.

கூட்டத்திற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி அமைப்பாளர் பி.எம்.தேவராஜ் தலைமை தாங்குகிறார்.

துணை அமைப்பாளர் அரவிந்த் அசோகன், மாநகர அமைப்பாளர் ஆர். அருண்

ஆகியோர் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்கள். நிகழ்ச்சியில் எழும்பூர் சட்ட மன்ற உறுப்பினரும், கழக சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்,எல்.ஏ, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த், குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன்,தலைமை கழக பேச்சாளர் ஆவடி கா.மு.ஜான், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில் குமார், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

முடிவில் மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆர். பிரபாகரன் நன்றி கூறுகிறார்.

# கூவாய் இளங்குயிலே!



ஏட்டைத் திருப்பி, இந்தி
எழமீண்டும் துடிக்கிறது!
சாட்டைஎடுப் பான்தமிழன்!
சண்டிஇந்திக் குதிரை,அதன்
சேட்டை ஒடியும்என்றும்
செங்கோட்டை யின்கனவுக்
கோட்டை இடியும்என்றும்
கூவாய் இளங்குயிலே!

துதிக்கும்உங்கள் இந்தியினைத்
தூக்கி,எங்கள் மொழிப்பற்றை
மிதிக்க நினைப்பீரேல்,
மேலாதிக் கச்சுவடு
பதிக்கத் துடிப்பீரேல்,
படைமறவர் பெருங்கூட்டம்
குதிக்கும் களத்தில்! எனக்
கூவாய் இளங்குயிலே!

வாடிக்கை யான(து)இந்தி
வாலாட்டம்! இனியும்இந்த
வேடிக்கை ஆணவத்தை
வேரோ டறுக்காமல்
நீடிக்க விடலாமா?
நெருப்பெடுத்துப் பதினாறு
கோடிக்கை நீளும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

சொந்தமண்ணில் “நீட்” கொடுத்த
சோகம்இன்னும் தீரவில்லை!
வெந்தபுண்ணில் இந்திஎன்னும்
வேல்பாய்ச்ச முனைவாரேல்,
செந்தமிழர் தாய்மண்ணில்
தெருதோறும் உணர்வெழுச்சி
கொந்தளிக்கும்! என்றுசொல்லிக்
கூவாய் இளங்குயிலே!

ஐயா,அண் ணா, கலைஞர்
அவர்கள்இல்லை எனும்திமிரா?
தொய்வறியாத் “தளபதி”யின்
சுட்டு விரலசைந்தால்
எய்த நினைக்கும்உங்கள்
“இந்திவெறிக் குறிக்கோளைக்”
கொய்(து)எறிவான் தமிழன்!எனக்
கூவாய் இளங்குயிலே!

கருத்துமொழி! கவிதைமொழி!
காவியங்கள் விளைத்தமொழி!
கிருத்து பிறக்குமுன்பே
கிளைவிரித்துத் தழைத்தமொழி!
திருத்தமிகு தமிழ்மொழிக்கோர்
தீங்குவிளைத் தால்,இந்திக்
குருத்தெலும்பு முறியும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

மறப்போமோ வரலாற்றை?
மாநிலத்தின் உரிமைகளைப்
பறிப்பாரேல் பொறுப்போமோ?
பார்த்துக்கொண் டிருப்போமோ?
வெறுப்பேற்றும் இந்தியினை
விரட்டுதற்கே, அறப்போர்க்குக்
குறிப்பார்ஓர் நாள்!என்று
கூவாய் இளங்குயிலே!

வம்புக்குச் செலமாட்டான்!
வலியவந்தால் விடமாட்டான்!
“தம்பியர்” பற்றி, அண்ணா
தான்வரைந்த கடிதம்இது!
தெம்புடைய தாய்மொழியைத்
தீண்டுவரேல், இந்திமொழிக்
கொம்புடைந்து நொறுங்கும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

பகைவிட்டுப் போகும்எனப்
பண்பாடு காத்துவந்தோம்!
மிகைவிட்டுப் போகாமல்
மென்மேலும் வடபுலத்துப்
புகைவிட்டுப் பரப்புவரேல்,
புலிச்சீற்றத் தமிழ்க்கூட்டம்
குகைவிட்டுப் பாயும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

தண்டுவடம் வளைந்தவர்கள்
தலைகவிழ்ந்தார் உங்களிடம்!
ஒண்டமிழ்த்தாய் மொழிகாக்கும்
“உதயநிதி ஸ்டாலின்” படைத்
தொண்டரடா நாங்கள்! எனத்
தோள்நிமிர்த்திப் புயல்வேகம்
கொண்டெழுந்தார் வீரர்! எனக்
கூவாய் இளங்குயிலே!

குழந்தையுடன் தாய்வருவாள்!
குமுறிஎழு வார்இளைஞர்!
விழுந்துப் படுத்துறங்கும்
வீட்டு முதியவரும்
எழுந்துப் புறப்படுவார்!
எட்டுத் திசைகளும், தீக்
கொழுந்து தெறிக்கும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

“ பண்டிதரின் வாக்குறுதி”
பறக்கிறதே காற்றில்! அதைக்
கண்டுகொள்ள மறுக்கிறதே
கல்நெஞ்சம்! “தாமரை” யின்
தண்டறுந்து போகும்! எங்கள் .
“தமிழ்க்கோபம்” ஏவுகணைக்
குண்டைவிட வலியதெனக்
கூவாய் இளங்குயிலே!

காட்டாட்சி தொடராமல்
காவிநிறம் படியாமல்
நாட்டாட்சி “இறையாண்மை”
நலியாமல், தில்லியிலே,
பாட்டாட்சி நிலவுதல்போல்
“பன்முகத்தன் மை” போற்றும்
கூட்டாட்சி மிளிர்க! எனக்
கூவாய் இளங்குயிலே!

தொடராதீர் மொழிவெறியை!
தூங்கும்என்று வேங்கையின்கால்
இடறாதீர்! வடவர்களே!
எரிமலைகள் வெடிக்கின்ற
திடலாகும் தமிழ்நாடு!
“ திராவிடநல் திருநாட்டில்”
கொடியஇந்தி வீழும்!எனக்”
கூவாய் இளங்குயிலே!

நஞ்சருந்தித் தீக்குளித்து
நந்தமிழைக் காப்பதற்கே
நெஞ்சுயர்த்தி இன்னுயிரை
நீத்தார்தம் நினைவலைகள்
சஞ்சரிக்கும் சுடுகாட்டுச்
சாம்பலில் இருந்து,அக்னிக்
குஞ்சுகள் கிளம்பும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

ஆலமரம் வீழ்ந்ததுபோல்
ஆவிதந்தார் தாய்மொழிக்கே!
மாலையிட்டு, மலர்தூவி
வணங்குகின்றோம் அவர்நினைவில்!
காலப்பொன் னேட்டில்,ஒளிர்
கல்வெட்டாய் அவர்பெருமை
கோலோச்சி விளங்கும்எனக்
கூவாய் இளங்குயிலே!



**கவிச்சுடர் கவிதைப்பித்தன்**



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் (23.01.2025) சென்னை, வர்த்தக மையத்தில் இந்திய கதிரியக்க மற்றும் இமேஜிங் சங்கத்தின் (IRIA) 77வது ஆண்டு மாநாட்டினை தொடங்கி வைத்து மருத்துவக் கண்காட்சியினை பார்வையிட்டார். இந்நிகழ்வில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் முன்னாள் இயக்குநர் பத்மஸ்ரீ டாக்டர்.மயில்சாமி அண்ணாதுரை, இந்திய கதிரியக்க மற்றும் இமேஜிங் சங்கத்தின் தலைவர் டாக்டர் வி.என்.வரபிரசாத், இந்திய கதிரியக்க மற்றும் இமேஜிங் சங்கத்தின் புதிதாக பதவியேற்ற தலைவர் டாக்டர்.குர்தீப் சிங், மாநாட்டின் விழா ஒருங்கிணைப்பு தலைவர் டாக்டர் சி.அமர்நாத். மாநாட்டின் விழா ஒருங்கிணைப்பு செயலாளர் டாக்டர் எல்.முரளி கிருஷ்ணா ஆகியோர் கலந்து கொண்டனர்.